செய்தி வெளியீடு எண்:89 நாள்:05.02.2021

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 4.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், சைதாப்பேட்டையில் 27 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையக் கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு தகவல் ஆணையம் என்பது, தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசால் 7.10.2005–ல் அமைக்கப்பட்ட ஒரு சட்டபூர்வமான தன்னாட்சி அமைப்பாகும். கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வமைப்பானது வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 9.7.2019 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், மாநில தகவல் ஆணையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டிய அவசியத்தைக் கருதி, சென்னை, சைதாப்பேட்டையில், மாநில தகவல் ஆணையத்திற்கு, விசாரணை அறைகள், ஆணையர்களுக்கான அறைகள், அலுவலக அறைகள், மனுதாரர்களுக்கான காத்திருக்கும் அறைகள், நூலகம், கூட்ட அரங்கு, வாகன நிறுத்துமிடம், மனுதாரர்கள் மற்றும் அலுவலர்களுக்கான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்திட தரைத்தளம் மற்றும் 5 தளங்களைக் கொண்ட சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், சைதாப்பேட்டையில், 1 ஏக்கர் நிலப்பரப்பில், 7924.84 சதுர மீட்டர் கட்டட பரப்பளவில்

தரை மற்றும் 5 தளங்களுடன், 27 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இப்புதிய தமிழ்நாடு தகவல் ஆணையக் கட்டடம், மேல்முறையீட்டு விசாரணை அறைகள், ஆணையர்களுக்கான அலுவலக அறைகள், அலுவலர்களுக்கான அறைகள், அலுவலக அறைகள், மேல்முறையீட்டு மனுதாரர்களுக்கான காத்திருக்கும் அறைகள், நூலகம், கூட்ட அரங்கு, வாகன நிறுத்துமிடம், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள வசதி, கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் எஸ். ஸ்வர்ணா, இ.ஆ.ப., மாநில தலைமை தகவல் ஆணையர் திரு. ஆர். ராஜகோபால், இ.ஆ.ப., (ஓய்வு), மாநில தகவல் ஆணையர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**